**செப்டம்பர் - 01**

# TNPSC துளிகள்

- மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகமானது, உலகளாவிய ரீதியில் பயன்படுத்தப்படும் அனைத்து முக்கிய குறிகாட்டிகள் மற்றும் அளவுருக்களின் அடிப்படையில், புதிய கண்டுபிடிப்புகளை வெளியிடுவதற்கான கல்வி நிறுவனங்களை வரிசைப்படுத்தும் பொருட்டு புதிய கண்டுபிடிப்பு சாதனைகளைக் கொண்ட நிறுவனங்களுக்கான அடல் தரவரிசைப் பட்டியலை (Atal Ranking of Institutions on Innovation Achievements -ARRIA) அறிமுகப்படுத்தியுள்ளது.
- மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகமானது, நாடு முழுவதும் உள்ள அனைத்து உயர் கல்வி நிறுவனங்களிலும் புத்தாக்கத்திற்கான கலாச்சாரத்தை முறையாக ஊக்குவிக்கும் பொருட்டு, அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுவின் வளாகத்தில், “புத்தாக்கத் துறை” ஒன்றைத் துவக்கியுள்ளது.
- 6வது விரிவான பிராந்தியப் பொருளாதாரக் கூட்டமைப்பின் (Regional Comprehensive Economic Partnership- RCEP) வர்த்தக அமைச்சர்கள் கூட்டம் சிங்கப்பூரில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கான இந்தியக் குழுவிற்கு, மத்திய வர்த்தக மற்றும் தொழிற்சாலை மற்றும் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் சுரேஷ் பிரபு தலைமை தாங்கினார்.
    - இந்த சந்திப்பானது, 10 ஆசியான் நாடுகளையும் 6 ஆசியான் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் பங்குதாரர்களையும் உள்ளடக்கியது ஆகும். அவை முறையே இந்தியா, சீனா, ஜப்பான், கொரியா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகும்.
- நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்ற கங்கையை தூய்மைப்படுத்தும் திட்டத்திற்கு பங்களிப்பு வழங்குவதன் ஒரு பகுதியாக, ஜெர்மனி, இந்தியாவிற்கு 120 மில்லியன் யூரோக்களை (சுமார் 990 கோடி) கடனாக வழங்கவுள்ளது.
    - இந்த நிதியானது, உத்தரகாண்டில் கழிவுநீர் கட்டமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கு, கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலைகளை நிர்மாணிப்பது மற்றும் தற்போது உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு முறைகளை மறுசீரமைப்பு செய்வது உட்பட பல்வேறு நடவடிக்கைகளுக்கு இது பயன்படுத்தப்படும்.
- ஆசிய மேம்பாட்டு வங்கியானது, கர்நாடகாவின் கர்நாடகா மாநில நெடுஞ்சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு (Karnataka state high ways Improvement III Project- KSHIP III) நிதியளிப்பதற்காக 346 மில்லியன் அமெரிக்க டாலர்கள் கடனாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இந்த நிதியானது கர்நாடகாவின் 12 மாவட்டங்களில் உள்ள பொருளாதார மையங்களின் இணைப்பு மற்றும் அணுகலை மேம்படுத்த பயன்படுத்தப்படும்.
- இந்தியா, மியான்மரின் எல்லைகளை ஒட்டி உள்ள மிசோரமில் குடியேற்ற சோதனைச் சாவடிகளை அமைத்துள்ளது. இது கிழக்கத்திய அண்டை நாடுகளுடன் வளர்ந்து வரும் நெருங்கிய உறவின் பிரதிபலிப்பாகும்.
    - முறையான பயண ஆவணங்களுடன் மியான்மருக்கு உள்ளேயோ அல்லது வெளியே செல்லும் பயணிகள் இந்தியாவில் நுழைவதற்கோ அல்லது வெளியேறவோ, அங்கீகாரம் பெற்ற குடியேற்ற மையமாக மிசோரத்தில் ‘சோக்காவ்தார்’ சோதனைச் சாவடியை இந்தியா நிறுவியுள்ளது.
- சவுதி அரேபியாவில் வெளியிடப்படும் முதல் பாலிவுட் படமாக அக்ஷய் குமார் நடித்த

"கோல்டு" படம் அமைந்துள்ளது.

- எழும்பூரில் உள்ள பிரசிடென்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியானது, மழலையர் வகுப்புகளை, பொது மற்றும் தனியார் கூட்டிணைவின் (PPP) மூலமாக நடத்தப்பட உள்ளது. இதன் மூலம், இத்திட்டம் ஆரம்பிக்கப்பட உள்ள 32 பள்ளிகளில் மாநிலத்தின் முதலாவதாக இப்பள்ளி உருவெடுத்துள்ளது. இது பல இடர்களுக்கிடையே மாநில அரசால் வழங்கப்படுகின்ற கல்வியில் ஈடுபாட்டை அதிகரிப்பதையும் மாணவர் சேர்க்கைகளை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## நிதி ஆயோக்கின் போக்குவரத்து வாரம்

- நிதி ஆயோக்கானது, ஆகஸ்ட் மாதம் 31-ம் தேதி முதல் 2018 செப்டம்பர் 6-ம் தேதி வரை நடைபெற உள்ள இயக்க வாரத்திற்கான நிகழ்ச்சிகளின் தொடரை வெளியிட்டுள்ளது.
- இந்த வாரத்தின் 7 நாட்களில், மொத்தம் 17 நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது. இந்த நிகழ்வுகள், போக்குவரத்து தளத்தின் பல்வேறு பங்குதாரர்களுடன் தொடர்பு கொள்ள உதவும்.

## இந்திய இரயில்வே கெய்ல் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

- கெய்ல் (இந்தியா) நிறுவனமானது, விநியோகிப்பாளரின் பட்டறைகள், உற்பத்தித் தளங்கள், கிடங்குகள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளுக்கு, இயற்கை எரிவாயுவை விநியோகிப்பதற்கான உள்கட்டமைப்புகளை உருவாக்குவதற்காக, இந்திய இரயில்வேயுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைக் கையெழுத்திட்டுள்ளது.
- இது, உட்கட்டமைப்பை உருவாக்கவும், தொழில்துறை மற்றும் வீட்டுப் பயன்பாட்டிற்காக, அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG), குழாய்வழி இயற்கை எரிவாயு (PNG) மற்றும் திரவ இயற்கை எரிவாயு (LNG) போன்றவற்றை விநியோகிப்பதையும் நோக்கமாகக் கொண்டதாகும்.
- இந்த உடன்படிக்கையானது, தொழிற்துறையில் பயன்படுத்தப்படும் வாயுக்களான அசிட்டிலின் கரைசல், திரவ இயற்கை எரிவாயு (LPG), பாரத் உலோகவெட்டு எரிவாயு, உலை எண்ணெய் மற்றும் அதிவேக டீசல் எனப்படும் ஹை-ஸ்பீடு டீசல் போன்றவற்றின் மாற்றாக இயற்கை எரிவாயுவை உபயோகிக்க உதவும்.

## அரசு மின் சந்தைக்கான (GeM) தேசியத் திட்டம்

- அரசு மின் சந்தை தேசியத் திட்டமானது, பிரதான மத்திய அமைச்சகங்கள், மாநில அரசுகள் மற்றும் அதனுடைய நிறுவனங்கள் போன்றவை, அரசு மின் சந்தையை பயன்படுத்துவதை விரைவுபடுத்துவதற்காக, செப்டம்பர் மாதம் 5ம் தேதி தொடங்கப்பட உள்ளது.
- இந்த தேசியத் திட்டமானது, உட்சேர்ப்பை ஊக்குவிப்பது, வெளிப்படைத்தன்மை மற்றும் பொது கொள்முதலில் செயல்திறனை ஊக்குவிப்பது, பணமற்ற, தொடர்பற்ற மற்றும் காகிதமற்ற பரிவர்த்தனை அடைதல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டதாகும்.

## இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்தின் (ICAR's) இரண்டு நாள் மாநாடு

- இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்தின் (Indian Council of Agricultural Research - ICAR) இயக்குனர் ஜெனரல், விவசாயத்தில் இளைஞர்களை ஊக்குவித்தல் மற்றும் கவர்தல் [Motivating and Attracting Youth in Agriculture - MAYA] என்ற தலைப்பில் இரண்டு நாள் மாநாட்டை புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.
- இந்த இரண்டு நாள் மாநாடானது, அனைத்து பங்குதாரர்களுக்கும் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த துறைகளில் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் பொருட்டு பல்வேறு வழிமுறைகளையும் வழிகாட்டல்களையும் கலந்தாலோசிக்க வழிவகை செய்யும்.

# சர்வதேசச் செய்திகள்

## 4வது BIMSTEC உச்சி மாநாட்டு அறிக்கை

- பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு அமைப்பின் (BIMSTEC) நான்காவது மாநாடு நேபாளத்தின் தலைநகரான காத்மண்டுவில் நடைபெற்றது.




- 'அமைதியான வளமான மற்றும் நிலையான வங்காளப் பிராந்தியத்தை நோக்கி' என்பதே இந்த மாநாட்டின் மையக் கருவாகும்.
- இந்த உச்சிமாநாட்டில் நேபாள பிரதம மந்திரி கே.பி. ஷர்மா ஒலியால் வழங்கப்பட்ட 18-அம்சங்களைக் கொண்ட காத்மண்டு பிரகடனமானது, அனைத்து உறுப்பு நாடுகளாலும் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- இலங்கை அதிபர் மைத்ரிபால சிறிசேனா தலைமையில், 5வது பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டை இலங்கை நடத்தவிருக்கின்றது.

# மாநிலச் செய்திகள்

## கிருஷ்ணா குடிர்

- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர் மேனகா சஞ்சய் காந்தியும் உத்திரப்பிரதேச மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத்தும், உத்திரப்பிரதேசத்தின் மதுராவில் விருந்தாவன் என்ற இடத்தில், 1000 விதவைகளுக்கான சிறப்பு காப்பகமாக 'கிருஷ்ணா குடிர்' என்ற காப்பகத்தை திறந்து வைத்தார்கள்.
- இது ஸ்வதார் கிரேஹ் திட்டத்தின் கீழ் பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டதாகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## இசுலாமிய முதல் காஷ்மீரக பெண் விமானி

- 30 வயதான இராம் ஹபீப் காஷ்மீரின் முதல் இசுலாமிய பெண் விமானியாக ஆனார்.
- தன்வி ரெய்னாவை பின்தொடர்ந்து இராம் விமானியாக ஆனார். காஷ்மீரி பண்டிதரான தன்வி ரெய்னா அவர்கள், காஷ்மீர் பள்ளத்தாக்கின் முதல் பெண் விமானியாக ஏர் இந்தியாவில் 2016ல் பணியில் சேர்ந்தார்.



- கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம், காஷ்மீரைச் சேர்ந்த 21 வயதான ஆயிஷா அஜீஸ் இந்தியாவின் இளைய பயிற்சி விமானியாக ஆனார்.

## பி.சி.ராய் விருது – 2017

- ஜவஹர்லால் பட்ட மேற்படிப்பு மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் மருத்துவ நோயெதிர்ப்பியல் துறையைச் சேர்ந்த மருத்துவரான வி.எஸ்.நேகி அவர்களுக்கு 2017ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க பி.சி.ராய் விருது வழங்கப்பட்டது.
- இந்த விருதானது, மருத்துவத் துறையின் பல்வேறு பிரிவுகளில் சிறப்புத் தன்மைகளை ஊக்குவிக்கும் சிறந்த திறமையாளர்களை அங்கீகரித்திட இவருக்கு வழங்கப்பட்டது.

***<u>பி.சி.ராய் விருது</u>***

- இந்த விருதானது, 1962ஆம் ஆண்டு இந்திய மருத்துவக் கழகத்தின் புகழ்பெற்ற மருத்துவரும் முன்னாள் மேற்கு வங்க முதல்வருமான மருத்துவர் பிதான்சந்திர ராய் அவர்களின் நினைவாக நிறுவப்பட்டது ஆகும்.
- பி.சி.ராய் விருதானது, இந்தியாவிலுள்ள மருத்துவர்களுக்கான மிக உயர்ந்த அங்கீகாரமாகும்.
- இந்த விருதானது ஆண்டுதோறும் 6 பிரிவுகளில் வழங்கப்படுகிறது. அவை,
  - இந்தியாவின் மிக உயர்ந்த ஆட்சி நிபுணர்
  - மிகச்சிறந்த மருத்துவர்
  - மருத்துவராகவும் ஆளும் மேதகத் தன்மையும் கொண்டிருத்தல்
  - மெய்யியலில் மிகச்சிறந்த நபராயிருத்தல்
  - கலையில் மிகச்சிறந்த நபராயிருத்தல்
  - அறிவியலில் மிகச்சிறந்த நபராயிருத்தல்

\- - - - - - - - - - - -